### ஆரம்ப, நகர்ப்புற சுகாதார நிலையங்களில் பணியாற்றும்

# 40 ஆயிரம் ஒப்பந்த ஊழியர்களுக்கு உடனடியாக சம்பளம் வழங்கிடுக!

## மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் பெ.சண்முகம் வலியுறுத்தல்!

சென்னை, மே 17-

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி மாநிலச் செயலாளர் பெ. சண்முகம் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

தமிழ்நாடு முழுவதும் தேசிய சுகாதார குழுமத்தின் திட்டங்களின் (என்.ஹெச்.எம்.) கீழ், அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள், நகர்ப்புற சுகாதார நிலையங்கள் மற்றும் அரசு மருத்துவமனைகளில் மருத்துவர், செவிலியர், ஆய்

வக நுட்பனர்கள், மருந்தாளுனர்கள், மருத்துவமனை பணியாளர்கள், கணினி இயக்குபவர்கள் என சுமார் 40,000 ஊழியர்கள் ஒப்பந்த முறையில் பணி செய்து வருகின்றனர். அவர்களுக்கு ஏப்ரல் மாத ஊதியம் இதுவரை வழங்கப்படவில்லை.

இந்த ஊதிய தாமதம், குறைந்த ஊதியத்தில் பணி செய்யும் இந்த ஊழியர்களையும், அவர்களின் குடும்பத்தினரையும் வெகுவாகபாதித்துள்ளது.

எனவே, குறைந்த ஊதியத்தில் வாழும் அந்தக் குடும்பங்கள் எதிர்கொள்ளும் நெருக்கடியை கருத்தில் கொண்டு அவர்களுக்கான ஏப்ரல் மாத ஊதியத்தை உடனடியாக வழங்கிட தமிழ்நாடு அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயற்குழு வலியுறுத்துகிறது.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### குன்னம் தொகுதியில்

# சா.சி.சிவசங்கர் எம்.எல்.ஏ. - கிராமங்கள்தோறும் நன்றி கூறினார்!

## மாவட்டப் பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்!

பெரம்பலூர், மே, 17-

பெரம்பலூர் மாவட்டம், குன்னம் சட்டமன்ற தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்ற முன்னாள் அமைச்சர், அரியலூர் மாவட்டக் கழகச் செயலாளர் சா.சி.சிவசங்கர்.எம்.எல்.ஏ.,குன்னம் தொகுதிக்குட்பட்ட வேப்பூர் ஒன்றியம், திருமாந்துறை, வீ.கீரனூர்,நோவா நகர், பெண்ணகோணம், கீழக்குடிகாடு, சு.ஆடுதுறை, கழனிவாசல்,ஓகளூர், புதுப்பேட்டை, இந்திராநகர், அத்தியூர்,அ.குடிகாடு, லப்பைகுடிக்காடு உள்ளிட்ட கிராமங்களில் வீதி, வீதியாச் சென்று வாக்காள பெருமக்களுக்கு நன்றி கூறினார்.

பொதுமக்கள், கழக நிர்வாகிகள் ஆரத்தி எடுத்து உற்சாக வரவேற்பளித்தனர். உடன் பெரம்பலூர் மாவட்ட கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன், விடுதலை சிறுத்தைகள் கட்சி மாவட்ட செயலாளர் அன்பானந்தம், மாநில ஆதிதிராவிடர் நலக்குழு துணை செயலாளர் பா.துரைசாமி, தே.மு.தி.க.மாவட்ட செயலாளர் சிவா துரை ஐயப்பன், ஒன்றிய கழக பொறுப்பாளர்கள் தி. மதியழகன், சி. இராஜேந்திரன், பேரூர் கழக செயலாளர் ஏ.எஸ். ஜாகீர் உசேன், பேரூராட்சி துணை தலைவர் எ.ரசூல் அகமது மற்றும் தோழமைக் கட்சிகளின் நிர்வாகிகள், கழகத் தோழர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

பெரம்பலூர் மாவட்டம், குன்னம் சட்டமன்ற தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்ற மேனாள் அமைச்சர், அரியலூர் மாவட்ட கழக செயலாளர் சா.சி.சிவசங்கர்.எம்.எல்.ஏ.,குன்னம் தொகுதிக்குட்பட்ட வேப்பூர் ஒன்றியம், திருமாந்துறை, வீ.கீரனூர்,நோவா நகர்,பெண்ணகோணம், கீழக்குடிகாடு, சு.ஆடுதுறை, கழனிவாசல்,ஓகளூர், புதுப்பேட்டை, இந்திராநகர், அத்தியூர்,அ.குடிகாடு, லப்பைகுடிக்காடு உள்ளிட்ட கிராமங்களில் வீதி, வீதியாகச் சென்று வாக்களித்த வாக்காளப் பெருமக்களுக்கு நன்றி கூறினார், பொதுமக்கள், கழக நிர்வாகிகள் ஆரத்தி எடுத்து உற்சாக வரவேற்பளித்தனர். உடன் பெரம்பலூர் மாவட்ட கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன், விடுதலை சிறுத்தைகள் கட்சி மாவட்ட செயலாளர் அன்பானந்தம், மாநில ஆதிதிராவிடர் நலக்குழு துணை செயலாளர் பா.துரைசாமி, தே.மு.தி.க.மாவட்ட செயலாளர் சிவா துரை ஐயப்பன், ஒன்றிய கழக பொறுப்பாளர்கள் தி. மதியழகன், சி. இராஜேந்திரன், பேரூர் கழக செயலாளர் ஏ.எஸ்.ஜாகீர் உசேன், பேரூராட்சி துணை தலைவர் எ.ரசூல் அகமது மற்றும் தோழமை கட்சி நிர்வாகிகள், கழக தோழர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

### சேலம் மத்திய மாவட்டத்திற்குட்பட்ட

# சேலம் மேற்கு சட்டமன்றத் தொகுதி நிர்வாகிகள் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் எஸ்.ராஜேந்திரன் பங்கேற்றார்!

சேலம், மே 17-

சேலம் மத்திய மாவட்டத்திற்கு உட்பட்ட மேற்கு சட்டமன்ற தொகுதியில் உள்ள தி.மு.க. நிர்வாகிகளுடான ஆலோசனை கூட்டம் மாவட்ட தி.மு.க. அலுவலகமான கலைஞர் மாளிகையில் நடைபெற்றது.

சேலம் மத்திய மாவட்ட தி.மு.க. செயலாளரும், முன்னாள் அமைச்சருமான ராஜேந்திரன் தலைமையில் நடைபெற்ற இந்த கூட்டத்தில் மேற்கு தொகுதியில் உள்ள பகுதி செயலாளர்கள், வார்டு செயலாளர்கள் மற்றும் தி.மு.க. நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் முன்னாள் அமைச்சர் ராஜேந்திரன் பேசும் போது, தமிழ்நாட்டில் சமூக வலைதளங்களில் வந்த தகவலை நம்பி பொது மக்கள் ஏமாந்து உள்ளனர் என்றும், வரும் 6 மாதத்தில் மக்கள் தங்களது தவறை உணர்வார்கள் என்று பேசிய அவர், நடைமுறைக்கு ஒவ்வாத வாக்குறுதிகளை கொடுத்து மக்களை ஏமாற்றி உள்ளதாக பேசிய அவர் வெற்றி வாய்ப்பை இழந்தாலும் மக்களுக்கான பணிகளில் தொடர்ந்து ஈடுபட வேண்டும் என்றும் மக்களோடு தி.மு.க. நிற்கும் என்பதனை உறுதிப்படுத்தும் வகையில் மக்களுக் கான தேவையை செயல்படுத்தும் பணியில் ஈடுபட வேண்டும் என்று கேட்டுக் கொண்ட அவர் அடுத்து வரும் உள்ளாட்சி தேர்தலில் திமுக வெற்றிக்காக பாடுபட வேண்டும் என்றும் கேட்டு கொண்டார்.

கூட்டத்தில் மத்திய மாவட்ட பொருளாளர் கார்த்திகேயன், சேலம் மாநகர செயலாளர் ரகுபதி தலைமை செயற்குழு உறுப்பினர் ராஜேந்திரன் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

# புதுக்கோட்டை தெற்கு மாவட்டக் கழகச் செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் எஸ்.ரகுபதி எம்.எல்.ஏ. அறிக்கை!

புதுக்கோட்டை,. மே 17-

புதுக்கோட்டை தெற்கு மாவட்டச் செயலாளரும், முன்னாள் அமைச்சர், திருமயம் சட்டப்பேரவை உறுப்பினர் எஸ்.ரகுபதி வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு :

இன்று (17.5.2026- ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணியளவில் புதுக்கோட்டை மாலையீடு கற்பக விநாயகா (ஏசி) திருமண மஹாலில் புதுக்கோட்டை

தெற்கு மாவட்ட செயற்குழுகூட்டம்புதுக்கோட்டை தெற்கு மாவட்ட அவைத் தலைவர் அ.சுப்பிரமணியன் தலைமையிலும், முன்னாள் அமைச்சர் ஆலங்குடி சட்டமன்ற உறுப்பினர் சிவ.வீ.மெய்யநாதன், புதுக்கோட்டை வடக்கு மாவட்ட செயலாளர் கே.கே.செல்லப்பாண்டியன் ஆகியோர் முன்னிலையிலும் நடைபெறுகிறது. இந்நிகழ்வுகளில் மாநில, மாவட்ட நிர்வாகிகள், ஒன்றிய, நகர,பேரூர் கழக செயலாளர்கள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள்,

மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள், மாவட்ட பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தமது அறிக்கையில் கூறி உள்ளார்.

பொருள்:

கழக ஆக்க பணிகள்.

# நெல்லை தொகுதியில் நன்றி அறிவிப்புக் கூட்டம்!

## நெல்லை மேற்கு மாநகரப் பொறுப்பாளர் சு.சுப்பிரமணியன் அறிக்கை!

நெல்லை, மே.17--

நெல்லை சட்டமன்ற தொகுதி கழக வேட்பாளராக போட்டியிட்ட நெல்லை மேற்கு மாநகர பொறுப்பாளர் சு.சுப்பிரமணியன் 9 இடங்களில் வாக்காளர்களுக்கு நன்றி தெரிவிக்கும் கூட்டம் நடைபெறுகிறது. என அறிக்கை வெளியிட்டுள்ளார்.

அதில் அவர் கூறியிருப்பதாவது.

கழகத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க, கழக இளைஞர் அணி செயலாளர் சட்டமன்ற எதிர்க் கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழி காட்டுதலின்படி,கழக துணை பொதுச் செயலாளர்,கழக நாடாளுமன்ற குழு தலைவர் கனிமொழி கருணாநிதி அவர்களின் ஆலோசனைப்படி, நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் மு.அப்துல் வஹாப் எம்.எல்.ஏ. அறிவித்தலின்படி

நெல்லை சட்டமன்றத் தொகுதியில் எனக்கு வாக்களித்த வாக்காளர்கள் தி.மு.க.தொண்டர்களுக்கு நன்றி தெரிவிக்கும் கூட்டங்கள் 9 இடங்களில் நடை பெறுகிறது.

அதன்படி இன்று (மே 17 ஆம் தேதி) மாலை 6 மணிக்கு டவுண் சந்திப்பிள்ளையார் கோவில் அருகிலும்,இரவு 730 மணிக்கு ராமையன்பட்டியிலும்,(18 ஆம் தேதி) மாலை 6 மணிக்கு மானூர் ஒன்றிய அலுவலகம் அருகிலும் இரவு 7 மணிக்கு தச்சநல்லூர் அண்ணா சிலை அருகிலும், (19 ம் தேதி) மாலை 6 மணிக்கு பேட்டை மீனாட்சி தியேட்டர் அதிலும், இரவு 730 மணிக்கு சுத்தமல்லி கோபால சமுத்திரம் சாலையிலும்,(20ம் தேதி) மாலை 6 மணிக்கு தாழையூத்து 9 ம் நம்பர் பேருந்து நிறுத்தம் பகுதியிலும்,இரவு 730 மணிக்கு சங்கர்நகர் மின்வாரிய அலுவலகம் அருகிலும்,(21 ம் தேதி) கங்கைகொண்டான் பஜார் திடலிலும் நடைபெறுகிறது.

மேற்கண்ட கூட்டங்கள் மானூர் ஒன்றிய செயலாளர்கள் மாரியப்பன், அன்பழகன், அருள்மணி, பாளை வேளங்குளம் கண்ணன் ஆகியோர் தலைமையிலும், நெல்லை சட்டமன்ற தொகுதி தேர்தல் பார்வையாளரும் தலைமை செயற்குழு உறுப்பினருமான பேச்சிபாண்டியன், அவைத் தலைவர் முருகன், சிறுபான்மை நல உரிமைப் பிரிவு தலைவர் டி.பி.எம். மைதீன்கான், மாநில நெசவாளர் அணி செயலாளர் சொ. பெருமாள், மாநில மகளிர் தொண்டரணி துணை செயலாளர் விஜிலா சத்யானந்த் ஆகியோர்கள் முன்னிலையில் நடைபெறுகிறது.

இந்நிகழ்வில் மாநில, மாவட்ட, மாநகர,ஒன்றிய, பகுதி, பேரூர், வட்ட, கிளை, கழக நிர்வாகிகள், சார்பு அணி களின் நிர்வாகிகள், (BLA2) (BDA) (BLC) மற்றும் கழகத்தினர் திரளாக கலந்து கொள்ள வேண்டும்.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

# நாமக்கல் மேற்கு மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டப் பொறுப்பாளர் கே.எஸ்.மூர்த்தி அறிவிப்பு!

நாமக்கல், மே 16 -

நாமக்கல் மேற்கு மாவட்ட கழக பொறுப்பாளரும், முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான கே.எஸ்.மூர்த்தி அறிக்கை வருமாறு:

நாமக்கல் மேற்கு மாவட்ட தி.மு.க. செயற்குழு கூட்டம் வரும் நாளை (18.05.2026- திங்கட்கிழமை) காலை 10.00 மணிக்கு திருச்செங்கோட்டில் உள்ள நாமக்கல் மேற்கு மாவட்ட தி.மு.க. அலுவலகம் தளபதி அரங்கில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் மாவட்ட அவைத்தலைவர் ஆர்.நடனசபாபதி தலைமை தாங்குகிறார்

கூட்டத்தில் மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு மற்றும் பொதுக்குழு உறுப்பினர்கள், நகர, ஒன்றிய, பேரூர் கழக செயலாளர்கள் மற்றும் சார்பு அணி அமைப்பாளர்கள் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

கூட்டத்தில், நேற்று முன்தினம் சென்னை அறிவாலயத்தில் நடைபெற்ற மாவட்ட செயலாளர்கள் கூட்டத்தில் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாட்டில் கழகப்

பணிகளை தீவிர படுத்த வேண்டும் எனக் கூறியது மற்றும் கழக ஆக்கப் பணிகள் குறித்து விவாதிக்கப் பட உள்ளது

இவ்வாறு அவர் அறிக்கையில் கூறியுள்ளார்.

# இன்று நடைபெறுகிறது! நாகை மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டக் கழகச் செயலாளர் என்.கௌதமன் அறிவிப்பு!

நாகை. மே.17-

நாகை மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம் நாகையில் உள்ள மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில் இன்று (17.5.2026 - ஞாயிறு) காலை 10.00 மணிக்கு மாவட்டக் கழக அவைத் தலைவர் ப.செல்வம் தலைமையில் நடைபெறுகிறது.



கூட்டத்தில் மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு உறுப்பினர்கள், பொதுக் குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், சார்பு அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பொருள் :

1.கழகத் தலைவர் தளபதி தலைமையில் மாவட்ட செயலாளர்கள் கூட்டத்தின் தகவல்கள்

2.2026 சட்ட மன்றத் தேர்தலில் பணியாற்றியவர்களுக்கு நன்றி தெரிவித்தல்,

3. கழக ஆக்கப்பணிகள்.

இவ்வாறு மாவட்டச் செயலாளர் என்.கௌதமன் அறிவித்துள்ளார்.


திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

சி.எம்.இராமசாமி

மே 17 (1999)

இளம் வயதிலேயே கழகக் கொள்கையால் ஈர்க்கப்பட்டு, உறுப்பினராகி கழகப் பணியாற்றியவர்.

வடபெரும்பாக்கம் கிளைச் செயலாளராக மூன்று முறையும் – மாதவரம் ஒன்றிய துணைச் செயலாளராக இரண்டு முறையும் – மாவட்ட பிரதிநிதியாகவும் பொறுப்பு வகித்து கழகப் பணியாற்றியவர்.

கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டவர். குறிப்பாக, மிசா சட்டத்தை கண்டித்து, கறுப்புக் கொடி காட்டும் போராட்டத்தில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்

தி.மு.க.


## செஞ்சியில் நீர்மோர் பந்தல்!

செஞ்சி, மே 17- -

முத்தமிழறிஞர் கலைஞரின் பிறந்த நாளை முன்னிட்டு விழுப்புரம் வடக்கு மாவட்டம் செஞ்சி நகர திமுக சார்பில் செஞ்சி விழுப்புரம் சாலையில் உள்ள கூட்ரோட்டில் பொது மக்களின் தாகம் தீர்க்கும் வகையில் நீர் மோர் பந்தல் அமைக்கப் பட்டு அதன் திறப்பு விழா நிகழ்ச்சி நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு செஞ்சி நகர செயலாளர் கார்த்திக் தலைமை தாங்கினார்.

செஞ்சி ஒன்றிய பெருந் தலைவர் விஜயகுமார், செயற்குழு உறுப்பினர் நெடுஞ்செழியன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

செஞ்சி பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலிமஸ்தான் ஏற்பாட்டில் நடைபெற்ற நிகழ்ச்சியில் விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளர்முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் கலந்து கொண்டு நீர் மோர் பந்தலை திறந்து வைத்து பொதுமக்களுக்கு நீர் மோர், வெள்ளரிக்காய், கூல் ட்ரிங்க்ஸ், இளநீர், முலாம்பழம், தர்பூசணி, ஆகியவற்றை வழங்கினார்.